**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.25/2025**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Venkatesh | Father Name | : | Thammaiya |
| Village | : | | Age | : | |

**நாள்:12.02.2026.**

**ம.சா.1. முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யவேண்டுகிறேன்.

| S.No | Exhibits | Description |
|---|---|---|
| 1 | ம.த.சா.ஆ.1 | 10.08.2025 ம் தேதியிட்ட குற்ற எண்.299/2025 முதல் தகவல் அறிக்கை கார்பன் நகல் |
| 2 | ம.த.சா.ஆ.2 | AR Copy அரசு மருத்துவமனை தேன்கனிக்கோட்டை ஜெராக்ஸ் நகல் |
| 3 | ம.த.சா.ஆ.3 | குணம் மருத்துவமனையின் விடுவிப்பு சான்று அசல் |
| 4 | ம.த.சா.ஆ.4 | TN 34 AH 8656 வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் |
| 5 | ம.த.சா.ஆ.5 | TN 34 AH 8656 வாகனத்தின் காப்பீடு பாலிசி ஜெராக்ஸ் நகல் |
| 6 | ம.த.சா.ஆ.6 | TN 34 AH 8656 வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் |
| 7 | ம.த.சா.ஆ.7 | TN 70 AT 6384 என்ற வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் |
| 8 | ம.த.சா.ஆ.8 | TN 70 AT 6384 என்ற வாகனத்தின் காப்பீடு பாலிசி ஜெராக்ஸ் நகல் |
| 9 | ம.த.சா.ஆ.9 | எனது ஆதார் அட்டை ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 10 | ம.த.சா.ஆ.10 | மருத்துவமனை பில்கள் ரூ. 2,09,078/- அசல் |

| | | |
|---|---|---|
| 11 | ம.த.சா.ஆ.11 | எனது வங்கி கணக்கு புத்தம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 12 | ம.த.சா.ஆ.12 | எனது PAN Card ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது. |
| 13 | ம.த.சா.ஆ.13 | TN 34 AH 8656 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் |
| 14 | ம.த.சா.ஆ.14 | TN 70 AT 6384 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் |

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

விபத்து 09.08.2025ம் தேதியில் நடந்தது என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ள வாகனம் பஜாஜ் பல்சர் வாகனம் ஆகும். எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்நர் உரிமம் இல்லை என்றால் இருந்தது விபத்தின் போது தொலைந்து விட்டது. நான் ஒசூர் RTO அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். தற்போது என்னால் ஒசூர் RTO அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் வாங்கி தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனது வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் போது நான் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யாததால் CR Issue செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தானது இரவு 9.30 மணிக்கு ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தேன்கனிக்கோட்டை டு பஞ்சப்பள்ளி ரோட்டில் TVS Show Room அருகில் சென்று கொண்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.5 ஆனது பாலிசி காப்பீடு கிடையாது என்றால் சரியல்ல. ம.த.சாஆ.5 ல் 1 முதல் 10 பக்கங்கள் உள்ள நிலையில் நான் 2 வது பக்கம் மட்டும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் தான் நின்று கொண்டிருந்த வாகனத்தை கவனிக்காமல் இரவு நேரத்தில் நின்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல.நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கும் நின்று கொண்டிருந்த வாகனத்திற்கும் இடையே குறிப்பிட்ட இடைவெளி விட்டு கட் செய்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் தான் வேகமாக வந்து வாகனம் இருப்பதை கவனிக்காமல் மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. மனுவில் சொல்லியுள்ளவாறு நின்று கொண்டிருந்த வாகனம் தவறான திசையில் நின்றுகொண்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்டுள்ள ஊன சான்று மிகைபடுத்தி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள ஊனம் நிரந்தர ஊனம் அல்ல என்று பகுதியான ஊனம் என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. நான்

விவசாயம் செய்து வருகிறேன். எனது வருமாமனம் எவ்வளவு என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் நான் முதலில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். பிறகு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பிறகு ஓசூர் குணம் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றேன். எனக்கு எங்கு அடிப்பட்டது என்றால் முகம், தலை, இடுப்பு, தோள்பட்டை ஆகிய இடங்களில் அடிப்பட்டது. எனக்கு எலும்பு முறிவு எங்கு ஏற்பட்டது என்றால் முகத்தில் இரண்டு பக்கங்களிலும் ஏற்பட்டது. எனக்கு நெஞ்சுமுதல் விலா எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. குணம் மருத்துவமனையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு முகத்தில் ஆப்பரேசன் செய்யப்பட்டிருக்கிறது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவமனைபில்களை மருத்துவமனை நிர்வாகத்தை விசாரித்து நிருப்பித்தால் எனக்கு கிடைக்க தக்கது என்றால் சரியல்ல. எனது அஜாக்கதையினால் விபத்து ஏற்பட்டுள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.